வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

<u>ந.க.எண்.4276/அ6/2020, நாள் 02.05.2020</u>

பொருள் : பள்ளிக்கல்வி - COVID 19 - 50 வயதுவரை உள்ள சேவை மேற்கொள்ள விருப்பமுள்ள தன்னார்வமுள்ள ஆசிரியர்களின் விவரங்கள் கோருதல் - சார்பாக

பார்வை : பள்ளிக்கல்வித்துறை முதன்மைச்செயலர் அவர்களின் கடிதம் எண்.1/பி.எஸ்.(எஸ்.இ)/2020, நாள் 02.05.2020

- - -

*பார்வையில் காணும் செயல்முறைகளுக்கிணங்க* ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தை சார்ந்த அனைத்து அரசு/ நிதியுதவிப்பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்/ ஆசிரியர்கள் மாவட்ட நிர்வாகத்தோடு இணைந்து மருத்துவப்பணிகள் அல்லாத (NON-MEDICAL SERVICES ) பணிகள் (பொது மக்களிடையே சமூக இடைவெளி ஏற்படுத்துதல், COVID-19 சார்பான விழிப்புணர்வு, பொது விநியோக கடைகளில் (Ration Shop) சமூக இடைவெளி ஏற்படுத்துதல், கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ள 50 வயதுவரை உள்ள ஆசிரியர்கள், தங்கள் பகுதியிலேயே சேவை மேற்கொள்ள விருப்ப முள்ள தன்னார்வமுள்ள ஆசிரியர்களின் விவரங்கள் மாவட்ட ஆட்சியரிடம் பட்டியல் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது

எனவே, இந்நிலையில் 25.03.2020 முதல் ஏற்கனவே ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் (வேலூர் மாவட்டம் -138, இராணிப்பேட்டை-117, திருப்பத்தூர்-134) பதிவு செய்து தன்னார்வ ப்பணி மேற்கொண்டு வருகின்றனர் . தற்போது பார்வை 1ல் காணும் முதன்மைச்செயலர் அவர்களின் உத்திரவின்படி கூடுதலாக 50 வயது வரை உள்ள எந்தவிதமான உடல் நி லைபாதிப்பில்லாத விருப்பமுள்ள ஆசிரியர்கள் உடடியாக பணி மேற்கொள்ளும் பொருட்டு மாவட்ட நிர்வாகத்திற்கு பட்டியல் வழங்க ஏதுவாக உடனடியாக நாளை (03.05.2020) நன்பகல் 12.00 மணிக்குள் கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பினை CLICK செய்து விவரங்களை உள்ளீடு செய்யுப்டி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஏற்கனவே உள்ளீடு செய்தவர்கள் தங்கள் பெயருக்கெதிரே தாங்கள் தற்போது தன்னார்வப் பணிபுரிந்துவரும் இடம் (Place now rendering Voluntary Service) என்ற கலத்தில் உள்ளீடு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த தன்னார்வப்பணியில் ஆசிரியர் பெருமக்கள் வெகுவாக ஈடுபட கனிவோடு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1) அனைத்துவகை பள்ளி தலைமையாசிரியர்கள் / ஆசிரியர்கள்
2) அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள்